RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

சிவகங்கை | மலர்-4 | இதழ்- 308 | நவம்பர்.8 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5









■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மதுரை மாவட்டத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கவும் மற்றும் முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைக்கவும், புதிய திட்டப் பணிகளை அடிக்கல் நாட்டவும் வருகை தர உள்ளதால் முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துறை அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அனபழகன் அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் திருமதி.வானதி அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.





■ தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் பேருந்து நிலையம் அருகில் மக்கள் நீதி மையம் கட்சியின் தலைவர் கமலஹாசன் அவர்களின் 71வது பிறந்த நாளை முன்னிட்டு தேவர் சிலை அருகில் தேனி மாவட்ட செயலாளர் பி கணேஷ்குமார் அவர்களின் ஆணைக்கிணங்க போடி நகர் செயலாளர் . ஐயப்பன் அவர்களின் தலைமையில் தேவர் சிலை, பழைய பேருந்து நிலையம் மற்றும் காவல் நிலையம் கூட்டணி கட்சிகளின் அலுவலகங்கள் ஆகிய இடத்தில் பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் பிரபு மற்றும் சிவமணிகண்டன் மாவட்ட பொருளாளர் மணிகண்டன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் அருண், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகராஜ், மாவட்டத் தொழிலாளர் அணி அமைப்பாளர் பாண்டி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கமல் மணி, நகர இளைஞரணி அமைப்பாளர் பாலா, நகரத் தொழிலாளர் அணி அமைப்பாளர் மீனாட்சி சுந்தரம், ஒன்றிய செயலாளர் பங்காரு, மாவட்ட ஐடி அமைப்பாளர் ஜீவன் சக்கரவர்த்தி, வட்டச் செயலாளர் முத்துராம் தங்கராஜ் நற்பணி இயக்கம் மாவட்ட அமைப்பாளர் செல்வராஜ் நகர அமைப்பாளர் சுபாஷ் மற்றும் கட்சிகளின் நிர்வாகிகள் தொண்டர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கழக இளைஞரணி சார்பில் "தி.மு.க 75 அறிவுத்திருவிழா!" : எங்கு? எப்போது?




சென்னை, நவ.8-

முற்போக்குச் சிந்தனைகளை முன்னெடுப்பது, இளைஞர்களிடம் அரசியல் உணர்வை வளர்த்தெடுப்பது, வாசிப்பைப் பரவலாக்குவது ஆகிய நோக்கங்களைக் கொண்ட `தி.மு.க 75 அறிவுத்திருவிழா' இன்று (நவ.8) நடைபெறுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து அறிவுச்செயல்பாடுகளை முன்னெடுக்கும் இயக்கம் என்பது அனைவராலும் அறியப்பட்டதே.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரை வழிகாட்டிகளாகக் கொண்ட கழகத்தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டலில் கழகம் இளைஞர் அணிச்செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் திராவிட மாடல் பயிற்சி பாசறைக் கூட்டங்கள், சட்டமன்றத் தொகுதிதோறும் கலைஞர் நூலகம், `முரசொலி' பாசறைப் பக்கம், `முத்தமிழறிஞர் பதிப்பகம்', இளம் பேச்சாளர்களைத் தேர்ந்தெடுத்து கருத்தியல் பயிற்சி அளிப்பது, கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம், கலைஞர் நிதிநல்கை திட்டம் ஆகிய கருத்தியல் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாக கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் 75ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, கழக இளைஞர் அணி `தி.மு.க 75 அறிவுத்திருவிழா' என்னும் மாபெரும் நிகழ்ச்சியை நடத்துகிறது.

சென்னை வள்ளுவர் கோட்டத்தில், தி.மு.க இளைஞர் அணி செயல்படுத்தும் `தி.மு.க 75 ஆம் அறிவுத்திருவிழா' என்னும் மகாத்தான நிகழ்ச்சியில், 08.11.25 காலை 9.30 விழாவில் கழகத்தலைவர், முதலமைச்சர் அவர்கள் 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' நூலை வெளியிட்டு, 'இருவண்ணக்கொடிக்கு வயது 75' கருத்தரங்கத்தையும் 'முற்போக்கு புத்தகக்காட்சி'யையும் தொடங்கி வைக்கவுள்ளார்.

75 ஆண்டுகால வரலாறு கொண்ட தி.மு.கழகம் அரசியல், சமூகம், பொருளாதாரம், பண்பாட்டுத்தளங்களில் ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்து எழுத்தாளர்கள், சமூகச்செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், சமூக மற்றும் அரசியல் இயக்கங்களை சேர்ந்தவர்கள், தேசிய கட்சித் தலைவர்கள், கழகத்தலைவர் உள்ளிட்ட தி.மு.க தலைமைக்கழக நிர்வாகிகள் எழுதிய கட்டுரைகள் அடங்கிய, 1,120 பக்கங்கள் கொண்ட `காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' என்னும் புத்தகம், முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் சார்பில் உருவாகியுள்ளது.

இந்த அறிவார்ந்த ஆவணத்தை முதலமைச்சர் அவர்கள் வெளியிட, கழகப் பொதுச்செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பெற்றுகொள்கிறார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக முதன்மைச்செயலாளர் கே.என்.நேரு, கழகத்துணைப் பொதுச்செயலாளர்கள், கழக இளைஞர் அணிச்செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் முன்னிலை வகிக்கும் இந்த விழாவில் `தன்மானம் காக்கும் கழகம்' என்னும் மேடை நாடகமும் நடைபெறவுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைக்கும் `இருவண்ணக்கொடிக்கு வயது 75' என்னும் கருத்தரங்கம் பத்து அமர்வுகளுடன் 08.11.25 மற்றும் 09.11.25 ஆகிய இருநாடுகள் நடைபெறுகின்றன.

கழகத்துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., கழக அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, முன்னாள் திட்டக்குழு துணைத்தலைவர் பேராசிரியர் மு.நாகநாதன், நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், கழக கொள்கைபரப்புச்செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு, சென்னை இதழியல் நிறுவனத்தின் தலைமை இயக்குநர் இ.எஸ்.பன்னீர்செல்வன், கழகத் தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின்; கழகக் கல்வியாளர் அணி தலைவர் செந்தலை கவுதமன் ஆகியோர் தலைமை வகிக்கும் இந்த அமர்வுகளில் கழகத்துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா எம்.பி., கழகத்துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., கழக கொள்கை பரப்புச்செயலாளர் முனைவர் இரா.தி.சபாபதிமோகன், கழக மருத்துவம் அணிச்செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., மாநில திட்டக்குழு செயல் துணைத்தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சன், திராவிடர் விடுதலைக்கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திராவிடர் கழகத்துணைப் பொதுச்செயலாளர் சே.எம். மதிவதனி உள்ளிட்ட பலர் கருத்துரை வழங்கினர். 09.11.25 அன்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கருத்தரங்க நிறைவுரை ஆற்றியுள்ளார்.

தமிழ்நாட்டிலேயே முதல் முயற்சியாக மார்க்சியம், பெரியாரியம், அம்பேத்கரியம், தமிழ்த்தேசியம், பெண்ணியம் போன்ற முற்போக்கு அரசியல் சார்ந்த புத்தகங்கள் மட்டுமே இடம்பெறும் `முற்போக்கு புத்தகக்காட்சி'யைக் கழக இளைஞர் அணி நடைபெறுகிறது. குளிரூட்டப்பட்ட அரங்கத்தில் 46 பதிப்பகங்களின் 58 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன இந்த முற்போக்கு புத்தகக்காட்சியில் அனுமதி இலவசம்.

08.11.25 முதல் 16.11.25 வரைநடைபெறவிருக்கும் 'முற்போக்கு புத்தகக்காட்சி'யில் தினந்தோறும் புத்தர் கலைக்குழு, புதுகை பூபாளம் கலைக்குழு, கோவன் கலைக்குழு, பாப்பம்பாடி ஜமா, நிகர் கலைக்கூடம், மாற்று ஊடக மையம் கலைக்குழு ஆகிய கலைக்குழுக்களின் கலைநிகழ்ச்சிகளும் பகுத்தறிவு மேஜிக் நிகழ்ச்சியும் நடைபெற உள்ளன.

இத்துடன் கழகக் கொள்கைபரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி, திராவிடர் கழகப்பிரச்சார செயலாளர் வழக்கறிஞர் அ.அருள்மொழி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச்செயலாளர் ஆளூர் ஷா நவாஸ், த.மு.எ.க.ச பொதுச்செயலாளர் எழுத்தாளர் ஆதவன் தீட்சண்யா, கவிஞர் யுகபாரதி, கவிஞர் சுகிர்தராணி ஆகிய முற்போக்குச் சிந்தனையாளர்களின் உரைவீச்சும் நடைபெறுகின்றன.

`தி.மு.க 75 அறிவுத்திருவிழா' நடைபெறவிருக்கும் இரு வாரங்களும் குடிநீர் வசதி, கழிவறை வசதி, வாகன நிறுத்த வசதி உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.




**சிட்டி ஆப்டிகல்ஸ் இணைந்து நடத்தும் மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம் சிவகங்கை சிவன் கோவில் எதிர்புறம் டி கே ஆனந்த் மஹாலில் வருகின்ற ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மேல் நடைபெற உள்ளது அனைத்து பொதுமக்களும் தவறாது கலந்து கொண்டு பயன்பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கிறார் சிட்டி ஆப்டிகல்ஸ் உரிமையாளர் S. சதாம் உசேன்**

# வேலூர் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதியில் பொதுப்பணித்துறை சார்பில் ரூபாய் 50 கோடி செலவில் நான்கு வழி சாலையாக அகலப்படுத்தும் பணிக்கு பூமி பூஜை விழா

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பங்கேற்பு




வேலூர் நவ.08

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, கெங்கநல்லூர் ஊராட்சி, கெங்கநல்லூர், அணைக்கட்டு சட்டமன்ற தொகுதியில் பல்வேறு இடங்களில் நான்கு வழி சாலையாக அகலப்படுத்தும் பணிக்கு சிறப்பு பூஜை செய்து அடிக்கல் நாட்டு விழா, அப்துல்லாபுரம் ஆசனாம்பட்டு ஆலங்காயம் திருப்பத்தூர் சாலையில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் 8 கி.மீ. நீளத்திற்கு நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்தும் பணியை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்பு பூஜைகள் செய்து அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்து சாலையோரம் புதிய மரக்கன்றுகளை நடவு செய்தனர்.

இந்நிகழ்ச்சியில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர்ஆனந்த், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் நந்தகுமார், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு விஜயன், மாவட்ட வருவாய் அலுவலர் த.மாலதி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, சிட்டிபாபு, அணைக்கட்டு ஒன்றிய அவைத் தலைவர் பழனி, கந்தனேரி மாவட்ட கவுன்சிலர் ராகப்பிரியா சீனிவாசன், மாவட்ட கவுன்சிலர்கள் கிருஷ்ணன் மேனன், பாபு, அணைக்கட்டு ஒன்றிய குழு தலைவர் சி.பாஸ்கரன், ஒன்றிய குழு துணை தலைவர் சித்ரா குமரபாண்டியன், அணைக்கட்டு (கி) ஒன்றிய பொருளாளர் ஜெய்சங்கர், வேலூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் அமுதா ஞானசேகரன், துணைத் தலைவர் மகேஸ்வரி காசி, ஒன்றியக்குழு உறுப்பினர் ஜெ.மகாலிங்கம், கெங்கநல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் நா.செந்தில்குமார், நெடுஞ் சாலைத்துறை திருவண்ணாமலை வட்ட கண்காணிப்பு பொறியாளர் (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு க.முரளி,

கோட்டப்பொறியாளர் கட்டுமானம் (ம) பராமரிப்பு, வேலூர் கோட்டம் ஆர்.என். தனசேகரன். உதவி கோட்ட பொறியாளர்கள் வேலூர் அசோகன், குடியாத்தம் அமுலு, அணைக்கட்டு வட்டாட்சியர் சுகுமாரன், அணைக்கட்டு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செல்வகுமார், வினோத் குமார், இளநிலை உதவி பொறியாளர்கள் மதன முஸ்தபா, யோகி, ஆய்வாளர் கவிதா, ஊராட்சி மன்ற தலைவர்கள் கரடிகுடி ஊராட்சி மன்ற தலைவர் கிரிதரன், தேவி செட்டிகுப்பம் ஊராட்சி மன்ற தலைவர் மணிமாறன், தெள்ளூர் ஊராட்சி மன்ற தலைவர் தேவி சுரேஷ்பாபு, சேக்கனூர் ஊராட்சி மன்ற தலைவர் மாலதி சுரேஷ்பாபு, பூதூர் ஊராட்சி மன்ற தலைவர் கவிதா சிவக்குமார், புத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் மோகன், அத்தியூர் ஊராட்சி மன்ற தலைவர் அண்ணாமலை, மாவட்ட ஓட்டுனர் அணி துணை அமைப்பாளரும், தாய்வழி வள்ளி திருமண மண்டப உரிமையாளரும், இலவம்பாடி ஊராட்சி முன்னாள் கவுன்சிலருமான டி.எம்.குமார், அணைக்கட்டு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளரும், சத்யா மோகன் கன்ஸ்ட்ரக்ஷன் மற்றும் பத்திரப்பதிவு எழுத்தாளரும், பார்வைய அரசு பள்ளி மேலாண்மை குழு தலைவருமான மோகன் சத்யா, இலவம்பாடி யுவராஜ், வெங்கடேசன், அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் மேற்கு வட்டத்திற்குட்பட்ட ஏற்குடி அச்சம்பத்து ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடைபெற்றது. வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செந்தில்மணி அழகுபாண்டி மண்டல வட்டார வளர்ச்சி அலுவலர் தண்டபாணி வட்டாட்சியர் முத்துப்பாண்டி ஊராட்சி செயலாளர்கள் கார்த்திகேயன் கண்ணன் விஜயபாஸ்கர் பிரபு ராஜேந்திரன், ஜெகதீசன் உட்பட அனைத்து துறை அரசு அலுவலர்கள் மற்றும் திமுக ஒன்றிய செயலாளர் திரு குமரன் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் சதாசிவம் உட்பட பலர் கலந்து கொண்டனர். இம்முகாமில் ஏற்குடி அச்சம்பத்து ஊராட்சியை சேர்ந்த மக்கள் ஏராளமானோர் கலந்துகொண்டு தங்களது கோரிக்கைகளை மனுக்களாக அளித்தனர்.



# கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் அருகே பிளிச்சி ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம்

கோவை, நவ.08-

பெரியநாயக்கன் பாளையம் ஒன்றியம், பிளிச்சி ஊராட்சியில் உள்ள பொதுமக்களுக்கான குறைகளை தீர்க்கும் “உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம் திமுக காரமடை தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் டி.ஆர். பிரதீப் தலைமையில் நடைபெற்றது. முகாமை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜ் செல்வம், ஜென்கின்ஸ் மற்றும் ஊராட்சி செயலர் பிரபு ஆகியோர் பொதுமக்களிடம் முதலாவதாக மனுக்களை பெற்று முகாமை துவக்கி வைத்தார்கள். இம்முகாமில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு மகளிர் உரிமைத் தொகைக்காக நீண்ட நேரம் காத்திருந்து விண்ணப்பித்தார்கள். நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக திமுக நிர்வாகிகள் வடக்கு மாவட்ட செயலாளர் தொ.அ.ரவி, தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம், காரமடை ஒன்றிய செயலாளர்கள் சு.சுரேந்திரன், எஸ்.எம்.டி. கல்யாண சுந்தரம், எஸ்.எஸ்.குளம் எஸ்.பி.சுரேஷ் குமார், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கிரி கலந்து கொண்டார்கள். உடன் சார்பணி நிர்வாகிகள் ராம்குட்டி, கணேஷ் மூர்த்தி, ராஜேந்திரன், ராஜன், ரங்கராஜ், வேலுச்சாமி மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். இந்த முகாமிற்கு வருகை புரிந்த ஊராட்சி பொதுமக்கள் சுமார் 2500 நபர்களுக்கு திமுக ஒன்றிய பொறுப்பாளர் பிரதீப் ஏற்பாட்டில் காலை மற்றும் மதியம் உணவு, சிற்றுண்டி, தண்ணீர் ஆகியவை வழங்கினார்கள்.



■ கோயம்புத்தூர் மாவட்டம் பெரியநாயக்கன் பாளையம் ஊராட்சி ஒன்றியம், 24 வீரபாண்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்த சிறு புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# உலக அளவில் புகழ்பெற்ற நறுவீ மருத்துவமனையில் 64 வயது முதியவருக்கு சென்னையிலிருந்து எடுத்துவரப்பட்ட கல்லீரல் கொண்டு மாற்று அறுவை சிகிச்சை செய்து சாதனை

## மருத்துவமனை தலைவர் ஜி.வி. சம்பத் தகவல்




வேலூர், நவ.08-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, பெங்களூர் டு சென்னை தேசிய நெடுஞ்சாலை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே, உலக அளவில் புகழ் பெற்ற நறுவி மருத்துவமனையில், கல்லீரல் முழுமையாக செயல் இழந்து உயிருக்கு போராடிய ஆந்திர மாநிலத்தை சேர்ந்த 64 வயது முதியவருக்கு வேலூர் நறுவீ மருத்துவமனையில் கல்லீரல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது. இது நறுவீ மருத்துவமனையின் சாதனை மைல் கல்லாக விளங்குவதாக மருத்துவமனை தலைவர் முனைவர் ஜி.வி.சம்பத் தெரிவித்துள்ளார்.

இது சம்மந்தமாக ஜி.வி. சம்பத் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது: ஆந்திர மாநிலம் நெல்லூர் மாவட்டத்தைச் சேர்ந்த 64 வயதுடைய நபரின் கல்லீரல் பாதிக்கப்பட்டு உயிருக்கு போராடிய அவர் வேலூர் நறுவீ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவரை மருத்துவமனையின் இரைப்பை குடல் சிகிச்சை பிரிவு மருத்துவர்கள் பரிசோதனை செய்ததில் அவரது கல்லீரல் முழுமையாக செயல் இழந்துள்ளதை கண்டறிந்தனர். அவருக்கு கல்லீரல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலை உள்ளதை அறிந்தனர்.

TRANSTAN (ட்ரான்ஸ்டான்) எனப்படும் தமிழ்நாடு அரசின் உடல் உறுப்பு தான ஒழுங்குமுறை அமைப்பில் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்ய உரிமம் பெற்ற நறுவீ மருத்துவமனை அந்த அமைப்பின் மூலமாக உடல் உறுப்புகளை பெற பதிவு செய்துள்ளது. இந்த நிலையில் சாலை விபத்தில் படுகாயம் அடைந்து சிகிச்சைக்காக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவர் மூளைச் சாவு அடைந்ததை தொடர்ந்து அந்த இளைஞரின் உடல் உறுப்புகளை தானம் செய்ய அவரது குடும்பத்தினர் முடிவு செய்தனர்.

மூளைச் சாவு அடைந்த அந்த இளைஞரின் கல்லீரல் ‘ட்ரான்ஸ்டான்’ மூலமாக நறுவீ மருத்துவமனையில் கல்லீரல் செயல் இழந்த அந்த முதியவருக்கு உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மூலம் பொருத்த வழங்கப்பட்டது. அதை தொடர்ந்து அந்த இளைஞரின் கல்லீரல் சென்னையிலிருந்து பாதுகாப்புடன் எங்கள் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு கல்லீரல் செயல் இழந்த 64 வயது முதியவருக்கு வெற்றிகரமாக பொருத்தப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மருத்துவமனையில் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மருத்துவ குழுவினர் சுமார் 12 மணி நேரம் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையில் ஈடுபட்டு அந்த முதியவருக்கு மாற்று கல்லீரலை பொருத்தி வெற்றி கண்டனர். தற்போது நலமுடன் இருக்கும் அந்த முதியவர் தொடர்ந்து 21 நாட்கள் மருத்துவமனையின் தீவிர கண்காணிப்பு பிரிவில் சிகிச்சையில் இருப்பார். அதன் பிறகு டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு வீடு திரும்புவார் என்பது குறிப்பிடத்தக்கது. பிறகு 6 மாத காலம் தொடர்ந்து மருத்துவமனை கண்காணிப்பில் இருப்பார். பின்பு முழு குணமடைந்து அன்றாட வேலைகளை தொடருவார் எனவும், உடல் உறுப்பு தானம் வழங்கும் ‘ட்ரான்ஸ்டான்’ நிறுவனம் மூலமாக முதன் முதலாக நறுவீ மருத்துவமனைக்கு கல்லீரல் உறுப்பு தானம் வழங்க ஏற்பாடு செய்த அந்த அமைப்பிற்கு எங்களின் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் தெரிவித்து இவ்வரிப்பினை வெளியிட்டுள்ளார். இந்நிகழ்வின்போது நறுவி மருத்துவமனை நிர்வாக மேலாளர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

# சிவகங்கை மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் கீழ்க்கண்ட வாகனங்களை பொது ஏலமிட முடிவு

சிவகங்கை, நவ.08-

சிவகங்கை மாவட்ட வருவாய் அலகில் 26.11.2025 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் கீழ்க்கண்ட வாகனங்களை பொது ஏலமிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ.எண் வாகன எண் தயாரிப்பு / ஆண்டு எரிபொருள் வகை

1. TN 63 AG 0001 Tata Indigo GLX-2009 Petrol
2. TN 63 G0288 Mahindra Bolero-2007 Diesel
3. TN 63 G 0280 Mahindra Bolero-2006 Diesel
4. TN 63 G 0317 Mahindra Bolero-2007 Diesel
5. TN 63 G 0612 Mahindra Bolero-2012 Diesel
6. TN 63 G 0603 Mahindra Bolero-2012 Diesel
7. TN 63 G 0474 Mahindra Bolero-2009 Diesel
8. TN 63 G 0477 Mahindra Bolero-2009 Diesel
9. TN 63 G 0610 Mahindra Bolero-2012 Diesel
10. TN 63 G 1234 Mahindra Scorpio -2010 Diesel

மேற்கண்ட வாகனங்கள் ஏல விற்பனை தொகை தொழில் நுட்பவல்லுநர் குழு நிர்ணயித்த தொகைக்கு குறையாது. மேலும் அதற்குண்டான நிஷிஜி செலுத்த வேண்டும். ஏலம் எடுப்போர் ரூ.1000/ வைப்புத் தொகையாக செலுத்தி, தங்கள் பெயர் விவரங்களை ஏலம் நடைபெறும் நாளன்று முற்பகல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள எச் பிரிவில் பதிவு செய்து கொள்ளவேண்டும் என மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# தமிழக வணிகர் சங்க பேரமைப்பின் சார்பில் வியாபாரிகள் சங்கத்தின் குடும்பவிழா

கோவை, நவ.08-

கோவை மாவட்டம் கிணத்துக்கடவு ஏழுர் பிரிவு தனியார் திருமண மண்டபத்தில் தமிழக வணிகர் சங்க பேரமைப்பின் ஒத்தக்கால் மண்டபம் வியாபாரிகள் சங்கத்தின் சார்பாக குடும்ப விழா கௌரவ தலைவர் பொன். செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநில தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா சிறப்பு விருத்திராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்.

இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக கோவை மண்டல தலைவர் டி.ஆர்.சந்திரசேகரன், கி.கடவு சட்டமன்ற உறுப்பினர் தாமோதரன், கோவை மாவட்ட தலைவர் இருதயராஜா, மாவட்ட செயலாளர் ஆர்.எஸ்.கணேசன், பொருளார் வஹாப், ஒத்தகால் மண்டபம் பேரூராட்சி தலைவர் பிரியதர்சினி ராஜசேகர், ஆகியோர் குடும்ப விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சிக்கு தலைவர் ராஜ ஜெயம் செயலாளர் குணசேகர பாண்டியன் பொருளாளர் பொன்ராஜ் ஏஎஸ்எம் டிரியல் எஸ்டேட் பாஸ்வெற்றி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் ஸ்டாலின்பாபு, சேர்மதுரை, முருகேசன்,காமராஜ் வேலாயுதம் மற்றும் நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் அவர்களது குடும்பத்தினர் உட்பட ஏராளமான கலந்து கொண்டனர்.

# திமுக துணைப் பொதுச் செயலாளர் பதவியேற்ற அமைச்சர் மு.பெ. சாமிநாதனுக்கு தாராபுரத்தில் பாராட்டு விழா - மேற்கு மண்டலத்தை வலுப்படுத்த உறுதிமொழி




திருப்பூர், நவ.07-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் உடுமலைச் சாலையில் உள்ள ரோட்டரி கிளப் அரங்கில், திமுக தாராபுரம் நகரம் மற்றும் ஒன்றிய கழகத்தின் சார்பில், புதிதாக திமுக கழக துணைப் பொதுச் செயலாளராக பொறுப்பேற்ற தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதனுக்கு பாராட்டு விழா, நடைபெற்றது.

அதேபோல், திமுக திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நான்காம் மண்டலத் தலைவர் இ.பத்மநாபன் நியமிக்கப்பட்டதையொட்டி அவருக்கும் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டன.

இந்த விழாவில் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் இ.கே.பிரகாஷ், நகரச் செயலாளர் முருகானந்தம், ஒன்றியச் செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார், நகர மன்றத் தலைவர் பாப்பு கண்ணன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர்.

பாராட்டு விழாவில் பேசிய அமைச்சர் கயல்விழி அவர்கள், “நீண்ட நாட்களாக திமுகவில் சிறப்பாக பணியாற்றி, கட்சிக்கும் மக்களுக்கும் தொண்டாற்றி வரும் அமைச்சர் சாமிநாதன் அவர்களுக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் துணைப் பொதுச் செயலாளர் பதவி வழங்கியிருப்பது பெருமைக்குரியது. அவரது பணிகள் தொடர்ந்து சிறக்க வாழ்த்துக்கள்,” என தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் இ.பத்மநாபன் அவர்கள், “முதலமைச்சரும் துணை முதல்வரும் எனக்குக் கட்சிப் பொறுப்பு வழங்கியமைக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கட்சியின் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்க்க தீவிரமாக பணியாற்றுவேன்,” என கூறினார்.

பின்னர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் இ.கே.பிரகாஷ் அவர்கள் உரையாற்றியபோது, “அமைச்சர் சாமிநாதன் பதவிக்காக ஆசைப்படுபவர் அல்ல; மாறாக பதவியே அவரைத் தேடி வந்துள்ளது. அவரின் மக்கள் சேவையைப் பார்த்தே நான் அரசியலில் வளர்ந்தேன். அவரைப் போலவே நானும் மக்களுக்காக உழைக்கிறேன்,” எனக் கூறினார். இறுதியாக, கழக துணைப் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்ற அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்கள் உரையாற்றுகையில்,

“பாஜக அரசு தமிழ்நாட்டில் எப்போதும் கால் பதிக்க முடியாது. மேற்கு மண்டலத்தின் 60 தொகுதிகளை வலுப்படுத்தும் பணியில் நாம் முழுமையாக ஈடுபட வேண்டியது அவசியம். பூத் வார்டு கமிட்டி நிலைகளில் பல்வேறு செயல்பாடுகள் தொடங்கப்பட்டுள்ளன. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மீண்டும் ஆட்சியை அமைக்க, நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்,” என உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.

விழா நிறைவில், உடுமலைச் சாலை பெரியார் தீவுத் திடலில் உள்ள பெரியார் சிலைக்கும், பழைய நகராட்சி அலுவலகம் எதிரே உள்ள அண்ணா திருவருட்சிலைக்கும் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்த நிகழ்வில் தாராபுரம், குண்டடம், மூலனூர், பேரூர் உள்ளிட்ட நகர மற்றும் ஒன்றிய திமுக செயலாளர்கள், வார்டு உறுப்பினர்கள், தொண்டர்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



# பழனி திருக்கோயிலுக்கு 12 லட்சம் மதிப்பில் நான்கு சக்கர வாகனத்தை வழங்கிய முருக பக்தர்

திண்டுக்கல், நவ.08-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் தைப்பூச திருவிழா விரைவில் தொடங்க உள்ள நிலையில் தொடர்ந்து திருக்கோயிலுக்கு பல்வேறு நன்கொடையாளர்கள் பேட்டரி கார், மற்றும் கனரக வாகனங்களை அன்பளிப்பாக வழங்கி வருகின்றனர்.

இதன் அடிப்படையில் பெங்களூரில் உள்ள றி-ஷி எடை குறைந்த தங்க நகை தயாரிப்பாளர்கள் குழுமத்தை சேர்ந்த கோபாலகிருஷ்ண கல்யாண ராமசுப்பிரமணியன் என்ற முருக பக்தர் 12,40,581 ரூபாய் மதிப்புடைய டாடா 407 கோல்ட் வாகனத்தை திருக்கோயிலுக்கு அர்ப்பணித்தார்.

தொடர்ந்து இந்நிகழ்வில் பி.எஸ். குழுமத்தைச் சேர்ந்த வைத்தியநாதன், சித்தார்த் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டு பாத விநாயகர் கோவில் முன்பு புதிய வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டன.

தொடர்ந்து திருக்கோயில் இணையானையர் மாரிமுத்து தலைமையில் நன்கொடையாளர்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி திருக்கோயில் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து நன்கொடையாளர் சுப்பிரமணியன் புதிதாக வழங்கப்பட்ட டாட்டா ஏசி கோல்ட் வாகனத்தின் சாவியை திருக்கோயில் நிர்வாக அதிகாரியிடம் ஒப்படைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் திருக்கோயில் அதிகாரிகள் பக்தர்கள் என அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்..



## பழனியில் விசிக சார்பில் நகராட்சி ஆணையரிடம் இட ஒதுக்கீடு பின்பற்ற வேண்டும் என வலியுறுத்தி கோரிக்கை மனு

திண்டுக்கல், நவ.08-
திண்டுக்கல் மாவட்டம் பழனி வ உ சி மத்திய பேருந்து நிலையத்தில் புதிதாக கட்டப்பட்ட வணிக வளாக கடைகள் மற்றும் காந்தி தினசரி சந்தையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளை வியாபாரிகளுக்கு ஏலம் விடுவதற்காக நகராட்சி சார்பில் வருகின்ற 14ஆம் தேதி பொது ஏல அறிவிப்பு நகராட்சி ஆணையர் தலைமையில் பொது மக்களுக்கு தெரிவிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து நகராட்சி சார்பில் நடத்தப்பட உள்ள பொது ஏலத்தில் தமிழக அரசு சட்டத்தின் படி இட ஒதுக்கீடு முறையாக பின்பற்றப்பட வேண்டும் என வலியுறுத்தி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் திருவளவன் மண்டல துணைச் செயலாளர் ஜலால் முகமது செய்தி தொடர்பாளர் பொதினிவளவன் துணைச் செயலாளர் பாவேந்தன் தொகுதி செயலாளர் போர்கொடியேந்தி ஆகியோர் தலைமையில் நகராட்சி ஆணையரிடம் கோரிக்கை மனுவை அளித்தனர்.

தொடர்ந்து அரசு விதிகளின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் மாற்றுத்திறனாளிகளுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்று சட்டங்கள் உள்ள நிலையில் இவற்றை முறையாக பயன்படுத்தி பொதுஏலம் நடைபெற வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டுள்ளன..

தொடர்ந்து இந்நிகழ்வில் நகர துணைச் செயலாளர் தமிழண்ணன் ஒன்றிய செயலாளர் ஜெயசீலன் கவுன்சிலர் திருமாறன் சங்கிலித்துரை, இடும்பன், லோகநாதன், சபீக்,சங்கிலித்துரை, அபுல் கலாம் ஆசாத், உள்ளிட்ட நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு நகராட்சி ஆணையரிடம் கோரிக்கை மனுவை அளித்தனர்..



■ சிவகங்கை மாவட்டம் நாட்டரசங் கோட்டையில் இந்திய செஞ்சிலுவை சங்கம்,ஹிரண்ய மெடிக்கல் அமைப்பு சிங்கப்பூர், காரைக்குடி பிரபு டெண்டல் கேர் ஆகியவை இணைந்து இலவச மருத்துவ முகாமை நாட்டரசன்கோட்டையில் உள்ள கானாடுகாத்தான் சுப்பையா செட்டியார் பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் நடைபெற்றது.பள்ளித் தலைவர் கண்ணப்பன் மற்றும் செயலர் நாகராஜன் ஆலோசனைப்படி நடைபெற்ற இம் முகாமில் அமெரிக்கா மருத்துவர் ஹிரண்யா பொது மருதுபம்மும், மருத்துவர் கலைவாணி பல் மருத்துவம் பள்ளி மாணவிகளுக்கு மேற்கொண்டனர் . இம் முகாமை சிவகங்கை மாவட்ட இந்திய செஞ்சிலுவை சங்க சேர்மன் சுந்தரராமன் துவக்கி வைத்தார். இன் நிகழவ்வில் சுப்பிரமணியன் செட்டியார்,ஹிரண்ய மெடிக்கல் சர்வீஸ் இயக்குனர் நாகு சுரேஷ்,செஞ்சிலுவை சங்க செயலர் அணங்கிருஷணன், துணை சேர்மன் முத்து பாண்டியன், மாவட்ட இரத்ததான நிர்வாகி சென்கையா ராமசாமி, இளைஞர் செஞ்சிலுவை சங்கம் மாவட்ட அமைப்பாளர் முனைவர் பாத்திமா பேகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அமெரிக்கா மருத்துவர் ஹிரன்யாவின் பல ஆண்டு சேவைகளை பாராட்டி சிறந்த மனித நேய விருது வழங்கப்பட்டது.முன்னதாக பள்ளி தலைமை ஆசிரியர் ஆரோக்கிய செல்வி வரவேற்றார். முதுகலை தமிழ் ஆசிரியர் கரிகாலன் நன்றி கூறினார்..

## வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கலாம் -மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, நவ.08-
சிவகங்கை மாவட்டத்தில் தமிழக அரசால் அறிவிக்க ப்பட்டுள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் பதிவு செய்து எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் உயிர்ப்பதிவேட்டில் காத்திருக்கும் இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. முறையாக பள்ளியில் பயின்று ஒன்பதாம் வகுப்பில் தேர்ச்சி பெற்று பத்தாம் வகுப்பில் தோல்வியுற்றவர்களுக்கு மாதம் ரூ.200/ம், 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.300/ம், பிளஸ் 2 தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.400/ம், பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.600/ வீதம் 3 ஆண்டுகளுக்கு வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை நேரடியாக மனுதாரர்களது வங்கி கணக்கில் காலாண்டுக்கொருமுறை வரவு வைக்கப்படும்.




இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் இளைஞர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் தங்களின் கல்வித்தகுதிகளை பதிவு செய்து 5 ஆண்டுகள் நிறைவு செய்திருக்க வேண்டும். தொடர்ந்து பதிவினை புதுப்பித்து இருக்க வேண்டும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 45 வயதுக்கு மிகாமலும், ஏனையோர் 40 வயதுக்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். மனுதாரரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000 (எழுபத்தி இரண்டாயிரத்திற்கு) மிகாமல் இருத்தல் வேண்டும்.

அன்றாடம் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று பயிலும் மாணவ/ மாணவியருக்கு இவ்வுதவித் தொகை வழங்கப்பட மாட்டாது. எனினும், தொலைதூரக் கல்வி அல்லது அஞ்சல் வழி மூலம் கல்வி கற்பவர்கள் உதவித் தொகை பெறலாம்.

ஏற்கனவே உதவித் தொகை பெற்று வருபவர்கள் தொடர்ந்து 3 வருடம் வரை உதவித்தொகை பெற நாளது தேதி வரை வங்கிகளில் குறிப்புகள் இடப்பட்ட வங்கிக்கணக்கு புத்தக நகலுடன் சுயஉறுதி மொழி ஆவணத்தையும் பூர்த்தி செய்து வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் ஒப்படைத்து தொடர்ந்து உதவித்தொகை பெற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. சுய உறுதிமொழி ஆவணம் சமர்ப்பிக்காத பயனாளிகளுக்கு உதவித் தொகை நிறுத்தப்படும்.

மேலும், இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறுவதற்கு மாற்றுத்திறனாளிகளுக்கு வருமான உச்சவரம்பு கிடையாது. இத்திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கு 10 ஆண்டுகள் வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது. வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் பதிவு செய்து ஓராண்டு நிறைவு பெற்ற மாற்றுத்திறனாளிகள் இந்த உதவித்தொகை பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம். ஆனால், அரசின் வேறு உதவித்தொகை எதுவும் பெறுதல் கூடாது. பத்தாம் வகுப்பு மற்றும் அதற்கு கீழ் படித்தவர்களுக்கு மாதம் ரூ.600/வீதமும் மேனிலை கல்விதேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.750/ம், பட்டதாரிகளுக்கு ரூ.1000/ம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த உதவித் தொகை பெறுவதற்கு மேற்காணும் தகுதிகள் உள்ளவர்கள் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திற்கு அனைத்துக் கல்விச் சான்றுகள், வேலைவாய்ப்பு அடையாள அட்டை ஆகியவற்றுடன் நேரில் வந்து இலவசமாக விண்ணப்பம் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் அனைத்து வேலை நாட்களிலும் வருடம் முழுவதும் வழங்கப்படும்.

மேலும், உதவித்தொகை பெறுபவர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு ரத்து செய்யப்பட மாட்டாது எனவும் உதவித்தொகை பெறுவதால் வேலைவாய்ப்பு பரிந்துரைத்தலுக்கு எவ்வித தடையும் ஏற்படாது.

எனவே, இத்திட்டத்தின் கீழ் இதுவரை உதவித் தொகை பெறாத தகுதியான இளைஞர்கள் விண்ணப்பத்தினைப் பெற்று பூர்த்தி செய்து விண்ணப்பத்தை அலுவலகத்தில் வேலை நாட்களில் நேரில் சமர்ப்பித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.

## மூளை கட்டிகளுக்கு தழும்பில்லா எண்டோஸ்கோபிக் அறுவை சிகிச்சை: பார்வையை மீட்டுத் தந்திருக்கும் மீனாட்சி சூப்பர் எப்பெஷாலிட்டி மருத்துவமனை

மதுரை, நவ.08-
மதுரை மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை மண்டை ஓட்டின் அடியில் இருந்த கட்டிகளை அகற்ற Ertended Indonesal Endoscopic Procedur எனற புதிய நுண் அறுவை சிகிச்சை முறையை வெற்றிகரமாகப் பயன்படுத்தியுள்ளது தென் தமிழ்நாட்டில் இது ஒரு முன்னோடி சாதனையாகும். இந்த நவீன சிகிச்சையால் மண்டை ஓட்டைத் திறந்து அறுவை சிகிசரை செய்ய வேண்டிய அவசியம் இல்லை, கடந்த மூன்று மாதங்களில் Plorum Sphenoidale Meningioma (பிளானம் ஸ்பெனாய்டேல் மெனிஞ்சியோமா என்ற அரிய வகைக கட்டியால் பார்வையை இழந்து வந்த மூன்று பெண்களுகக்கு இந்த அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இந்தக் கட்டிகள் பார்வை நரம்புகளை அழுத்தி அவர்களின் பார்வையைப் பாதித்திருந்தது

இந்த நோயாளிகளுக்கு கூட ஆழமான பகுதியில அதாவது மூளைக்கும் மூகளுக்கும் இடையில், பார்வை நரம்புகளுக்கு




மிக அருகில இருந்தது மருத்துவர்கள் குழு என்ற புதிய முறையில் உயர் தெளிவத்திறன் (HD) எண்டோஸ்கோப் கருவியின் உதவியுடன் மூக்கு வழியாகவே கட்டியை அகற்றியது இதனால், வெளியே தழும்புகள் ஏற்படவில்லை மூளையை விலக்க வேண்டிய அவசியமும் இல்லை கடடியை அகற்றிய பிறகு, மருத்துவர்கள் மண்டை ஓட்டிவள அடிப்பகுதியை மீண்டும் சீராக்கி அது முழுமையாகச் செயல்படுவதை உறுதி செய்தனர்.

இந்த அறுவை சிகிச்சைக் குழுவிற்கு, நரம்பியல் அறுவை சிகிச்சைத் துறையின் தலைவர் - முதுநிலை நிபுணர் டாக்டர். K.செல்வமுத்துக்குமரன் தலைமை வகித்தார் இக்குழுவில், முதுநிலை நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர். K.செந்தில்குமார் மற்றும் எண்டோவாஸ்குலார் நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர். கௌதம் குஞ்சா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். மயக்கவியல் நிபுணர்கள் மற்றும் நரம்பியல் கண் மருத்துவ நிபுணர்களின் சிறப்பான ஆதரவுடன் இந்தச் சிகிச்சை செயல்முறைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன.

இது குறித்து டாக்டர். செல்வமுத்துக்குமரன் கூறுகையில், கடநத மூன்று மாதங்களில் பார்வைக் குறைபாடு இருந்த மூன்று பெண்களுக்கு (40 வயதில் இருவர், 60 வயதில் ஒருவர். வெற்றிகரமாக அறுவை சிகிச்சை செய்து மீண்டும் பாரலை கிடைக் செய்ததில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம் மங்கலான பார்வை, தலைவலி போன்ற பிரச்சனைகளுடன் அவர்கள் வந்தனர் அவர்களை விரிவாகப் பரிசோதித்து மேம்பட்ட ஸ்கேன பீஉநீணீனீ எடுத்துப் பார்த்ததில ஒவ்வொருவருக்கும் மூளையின் முன் பகுதியில் பார்வை நரம்புகளை அழுத்தும் கட்டி இருப்பதைக் கண்டறிந்தோம் நன்றாக ஆவோசித்த பின் பழைய முறையில் மண்டை ஓட்டைத் திறப்பதற்குப் பதிலாக மூக்கு வழியாகவே புதிய எண்டோஸ்கோபிக் சிகிச்சை செய்ய நாங்கள் முடிவு செய்தோம் சிகிச்சைக்குப் பிறகு அவர்களுக்குப் பாரவை திரும்பக கிடைத்தது தென்னிந்தியாவில் இந்த ()முறையில் செய்யப்பட்ட சிகிச்சைகள் மிகச் சிலவே என்றார்.

## சனவேலி அரசு பள்ளியில் சட்ட விழிப்புணர்வு முகாமில் பள்ளிப்பருவத்தை பயனுள்ளதாக பேனவேண்டும் நீதிபதி பேச்சு

ஆர்.எஸ்.மங்கலம், நவ.08-
ஆர்.எஸ்.மங்கலம் அருகே உள்ள சனவேலி அரசு மேல்நிலைப் பள்ளியில் ராமநாதபுரம் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு மற்றும், திருவாடானை வட்ட சட்ட பணிகள் குழுவின் சார்பாக சட்ட விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

இம்முகாம் ராமநாதபுரம் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் தலைவர் முதன்மை மாவட்ட நீதிபதி மெஹபூப் அலிகான் அறிவுறுத்தலின் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் செயலாளர் சார்பு நீதிபதி பாஸ்கர் தலைமையிலும், திருவாடானை

வட்ட சட்டப் பணிகள் குழுவின் தலைவர் தலைவர் ஆன்டனி ரிஷந்தேவ் முன்னிலையிலும் நடைபெற்றது.

இம்முகாமில் பள்ளி தலைமை ஆசிரியர் பகவதி குமார், மற்றும் பள்ளி மேலாண்மை குழு தலைவி மகாலெட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக முதுகலை பட்டதாரி ஆசிரியர் வன்மிகநாதன் அனைவரையும் வரவேற்று வரவேற்புரையாற்றினார், இம்மு காமில் கலந்து கொண்ட பள்ளி மாணவ, மாணவிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக பேசிய சார்பு நீதிபதி, மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் செயலாளர் பாஸ்கர் மாணவப் பருவம் மிகவும் முக்கியமான பருவம் ஆகையால் இப்பருவத்தை நல்ல முறையில் பயன்படுத்தி வாழ்கையில் வெற்றி பெற வேண்டும். பெண்களின் பாதுகாப்பிற்காக சட்டங்கள் ஏராளமாக உள்ளது. போக்கோ உள்ளிட்ட வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்றால் பள்ளியில் படிக்கும் பொழுது ஆசிரியர்களின் அறிவுரைகளை ஏற்று நல்வழியை கடைபிடிக்க வேண்டும் ஏன் எனில் ஆசிரியர்கள் உங்களுக்கு ஏணி போன்றவர்கள் இன்று உங்களை மேல் வகுப்பிற்கு ஏற்றி விடுகின்றார்கள் என்றால் அடுத்து உங்களுக்கு பின்னால் உள்ளவர்களை அடுத்த நிலைக்கு மேலே ஏற்றி விடுகின்றார்கள் ஆகையால் ஆசிரியர் பணி என்பது மிகவும் அற்புதமான பணியாகும். உதாரணத்திற்கு ஒரு மரம் இருக்கின்றது என்றால் அந்த மரத்தில் வளரக்கூடிய கிளைகளில் தேவையற்ற கிளைகளை வெட்டி விட வேண்டும் அப்படி வெட்டிவிடவில்லை என்றால் அது பயனற்ற மரமாக வளர்ந்துவிடும் அது போல் தான். மாணவ, மாணவிகள் செய்யும் செயல்களில் தேவையற்றவைகளை விட்டு விட வேண்டும் என கண்டித்து நல் வழிபடுத்தி நல்ல சிறந்த மாணவர்களாக உருவாக்குவது தான் ஆசிரியர் பணி எனவும் எடுத்துரைத்தார்.

மேலும் இந்நாட்டின் எதிர்காலமே இன்றைய





மாணவர்களாகிய நீங்கள் தான் என்பதனை மனதில் கொண்டு திறம்பட கல்வி பயின்று ஒவ்வொறுவரும் தங்களுக்குள் ஒரு லட்சியத்தை மனதில் வைத்து திறமையை வளர்த்து கல்வி கற்று சாதனையாளர்களாக மாற வேண்டும். பெற்றோர்கள்,ஆசிரியர்கள் சொல்லிற்கு கட்டுபட்டு மதித்து நடத்திட வேண்டும். முதலில் ஒழுக்கத்தை கற்றுகொள்ள வேண்டும். வாழ்வில் முன்னேற வேண்டும், ஒரு ஐஏஎஸ் ஆகவோ, ஐபிஎஸ் ஆகவோ அல்லது டாக்டர், இஞ்சினியர், நீதிபதியாகவோ, வழக்கறிகராகவோ. மற்றும் பல துறை சார்ந்த உயர் பொறுப்புகளின் பதவியில் அமர வேண்டும் என்றாலும் முதலில் கல்வி முக்கியம் ஆகையால் பள்ளி பருவத்தை யாரும் வீணடித்துவிடக் கூடாது. போதைப் பொருட்களின் பழக்க வழக்கங்களுக்கு யாகும் ஆளாகி விடக் கூடாது. அந்த பழக்க வழக்கங்கள் மிகவும் கொடியவை என்பதனை அனைவரும் உணர வேண்டும், மற்றவர்களுக்கும் உணர்த்த வேண்டும். பள்ளிக்கு செல்லாமல் குழந்தை தொழிலாளர்களாக வேலைக்கு செல்லக் கூடாது. அவ்வாறு சென்றாலோ அல்லது குழந்தை தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தினாலும், சட்டப்படி குற்றமான செயல் , அதே போல் குழந்தை திருமணம் நடைபெறாமல் தடுத்து நிறுத்திட வேண்டும். மாணவர்கள் தேவையற்ற விசயங்களில் கவனம் செலுத்தாமல் கல்வியல் கவணம் செலுத்தி மாணவர்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என கூறியதுடன் .இப்பள்ளி 10 மற்றும் 12 ம் வகுப்புகளில் தொடர்ந்து நல்ல தேர்ச்சி பெற்று வருவதாக கேள்விப்பட்டேன். மிக்க மகிழ்சியாக உள்ளது. இந்த கிராமப்புறத்தில் உள்ள இப்பள்ளி தொடர்ந்து அதிகப்படியான சதவீத தேர்ச்சி பெற்று வருவது என்பது மிகவும் பாராட்ட தக்கது ஆகையால் இந்த சாதனை படைத்திட உறுதுணையாக இருந்த பள்ளி தலைமை ஆசிரியர், மற்றும் இருபாலர் ஆசிரி யர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் அனைவருக்கும் வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதாக கூறியதுடன் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு, மற்றும் வட்ட சட்டப் பணிகள் குழுவின் செயல்பாடுகள் குறித்து விளக்கி பேசி பள்ளி மாணவ மாணவிகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

மேலும் இம்மு காமில் கலந்து கொண்டவட்ட சட்டப் பணிகள் குழு தலைவர் நீதித்துறை நடுவர் ஆண்டனி ரிஷாந்தேவ் மாணவ பருவத்தில் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் குறித்தும் பெண்கள் பாதுகாப்பு மற்றும் பெண் கல்வி முக்கியத்துவம் குறித்தும் விளக்கி பேசினார்கள். மூத்த வழக்கறிஞர் தனபால் சட்டம் சார்ந்த சட்ட விழிப்புணர்வு உரையாற்றினார். இம்முகாமில் இருபாலர் ஆசிரியர்கள், மற்றும் மாணவ, மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியினை முதுகலை ஆசிரியர் சிலம்பரசன் தொகுத்து வழங்கினார். இறுதியில் ஆசிரியர் ரவிச்சந்திரன் நன்றி கூறினார். முகாமிற்கான ஏற்பாட்டை சட்ட தன்னார்வலர் கோட்டைச்சாமி, ராமராஜன் ஆகியோர்கள் செய்திருந்தனர்.



■ சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில், பாதுகாக்கப்பட்டு வரும் மின்னணு வாக்கு பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையினை நேற்று (7.11.2025) மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் தேர்தல் வட்டாட்சியர் அ.மேசியாதாஸ் உள்ளார்.



# காரைக்குடிக்கு தி.க.தலைவர் (நவ28ல்) வருகை: ரூ.10 லட்சம் நன்கொடை வழங்க முடிவு

காரைக்குடி, நவ.08-

காரைக்குடி தமிழ்நாடு முழுவதும் தி.க.தலைவர் கி.வீரமணி, "இது தான் ஆர்.எஸ்.எஸ் பா.ஜ.க.ஆட்சி இது தான் திராவிடம், திராவிட மாடல் ஆட்சி " எனும் தொடர் பரப்புரைப் பொதுக்கூட்டங்கள் நடந்து வருகின்றது.

காரைக்குடி கழக மாவட்டதி. க.சார்பில் ஏற்பாடுகளுடன் வருகின்ற, நவ.28 ல் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு முதல் பொதுக்கூட்டத்தில் தி.க.தலைவர் கி.வீரமணி பேசுகிறார். இரவு 7 மணிக்கு முடித்து புதுக்கோட்டைக்குச் செல்கின்றார். இந்த ஏற்பாடுகள் பற்றி, செயல் வீரர்கள் கலந்துரையாடல் கூட்டம், நவ.05 மாலை குறள் அரங்கில், மாவட்ட தி.க.தலைவர் ம.கு.வைகறை தலைமை யிலும், மாவட்ட தி.க. காப்பாளர் சாமிதிரா விடமணி முன்னிலை யிலும் துவங்கியது. மாவட்டதி.க.செயலாளர் கல்லூர் சி.செல்வமணி அனைவரையும் வரவேற்றார்.தி.க. மாநில ஒருங்கிணைப்பாளர் உரத்த நாடு இரா.குணசேகரன் சிறப்புரையாற்றினார். மாவட்ட தி.க.து. தலைவர் கொ.மணிவண்ணன், தி.க.தலைமைக்கழகப் பேச்சாளர் தி. என்னாரெசு பிராட்லா, தேவகோட்டை வீர. முருகப்பன், ந.செகதீசன் (மாநகர தி.க.தலைவர்), மும்பை மாநகர தி.க. தலைவர் பெ.கணேசன், மாவட்ட ப.க.து. தலைவர் முத்துலெட்சுமி, தேவகோட்டை ப.க. அமைப்பாளர் அ.அரவரசன், நெல்லுப்பட்டு இராமலிங்கம், குமரன் தாஸ்(ப.க. எழுத்தாளர் அணி அமைப்பாளர்), பெரியார் பெருந்தொண்டர் தித்திருமேனி, ஆகியோர் உரையாற்றினார்கள். கீழ்க்கண்ட தீர்மானம்வருமாறு: திருச்சி சென்னை தே.நெ.சாலை யிலுள்ள சிறுகனூரில் 42 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.110 கோடி மதிப்பீட்டில், 145 அடி உயரமுள்ள பெரியார் சிலையும், மற்றும் சில வசதிகளுடன் அமைக்கப்பட்டு வருவதற்கு, காரைக்குடி மாவட்ட பொதுமக்கள் சார்பில் ரூ:10 லட்சம் நிதிதிரட்டல் மூலம் நன்கொடை யினை தி.க.தலைவரிடம் வழங்கப்படும் என தீர்மானிக்கப்பட்டது.

# காரைக்குடியில் காரில் மர்மமான முறையில் இறந்து கிடந்த பெண்

சிவகங்கை, நவ.08-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே ஆவுடைப் பொய்கையில் காட்டுப்பகுதியில் ஒரு கார் உள்ளே மர்மமான முறையில் பெண் ஒருவர் இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

மகேஷ்வரி (38) எனும் பெண் காரைக்குடி நகர் பகுதியில் வாழ்ந்தவர். நேற்று காலை அவரது கார் சாலையின் ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்ததை பொதுமக்கள் கவனித்து,






போலீசுக்கு தகவல் அளித்தனர். போலீசார் வந்து விசாரணை நடத்தி, மரணத்தின் காரணம் குறித்து விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில் வழக்கு தொடர்பாக காவல்துறை தனிப்படை அமைத்து துரிதமாக இரவோடு இரவாக காரைக்குடி வேலுச்சாமி மகன் சசிகுமார் (லட்சுமி நகர்) குற்றவாளி கண்டறியப்பட்டு குற்றவாளிடம் கொலைக்கான காரணம் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் கண்டுபிடிப்பு

தேவகோட்டை, நவ.08-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை வட்டம் கோட்டூர் நயினார்வயல் அகத்தீஸ்வரர் கோவில் சௌந்தரநாயகி அம்மன் சந்நிதி அர்த்தமண்டபம் உள்பகுதி இடது மற்றும் வலதுபுற சுவரில் இரு கல்வெட்டுக்கள் இருப்பதாக ஆறாவயல் கிராமத்தைச் சேர்ந்த பெரியய்யா என்பவர் தெரிவித்த தகவலின் பேரில் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் வரலாற்றுத்துறை இணைப் பேராசிரியர் முனைவர் வேலாயுதராஜா மற்றும் புதுக்கோட்டை தொல்லியல் கழகத் தலைவர் ராஜேந்திரன் ஆகியோர் களஆய்வு மேற்கொண்டு அவ்விரு கல்வெட்டுக்களை படியெடுத்தனர். கல்வெட்டுக்களில் உள்ள செய்தி குறித்து அவர்கள் தெரிவித்ததாவது,

ஒரு கல்வெட்டு 36 வரிகளையும் மற்றொரு கல்வெட்டு 39 வரிகளையும் கொண்டுள்ளன. இவை பாண்டிய நாட்டை ஆண்ட முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் 14 வது ஆட்சியாண்டை(கி.பி.1229) சேர்ந்தவையாகும். முதல் மாறவர்மன் சுந்தர



தேவகோட்டை வட்டம் கோட்டூர் நயினார்வயல் அகத்தீஸ்வரர் கோவில்

பாண்டியன் மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டியநாட்டை கி.பி.1216 முதல் 1238 வரை ஆட்சி செய்த திறமையான அரசன் ஆவார். இவர் சோழர்களைப் போரில் தோற்கடித்ததால் சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவர் என இவரது கல்வெட்டுக்களின் மூலம் அறியப்படுகிறார். இப்பாண்டிய மன்னரது அரசியல் அதிகாரிகளுள் ஒருவனாக இருந்த அதாவது மாளவச் சக்கரவர்த்தி என்றும் மக்களால் மழவர் மாணிக்கம் என்றும் அழைக்கப்பட்ட அவ்வதிகாரி காளையார்கோயில் என்று வழங்கும் திருக்கானப்பேர் நகரில் வாழ்ந்தவன் ஆவான்.

இக்கல்வெட்டு காணப்படும் இவ்வூருக்கு வந்த மாளவச்சக்கரவர்த்தி திருவகத்திசுவரமுடைய நாயனார் கோயில் பூசையின்றி கிடக்குதென்று மன்னனிடம் சொல்லவே, மன்னர் கோயிலைச் சுற்றி இருந்த காட்டை வெட்டி அழித்து திருஅகத்தீஸ்வரமுடையநாயனார்க்கு வேண்டிய பூசைகள் செய்ய ஓடைபுறத்தில் இரண்டு மாச்செய் நிலம் காணியாக அந்தராயம், விநியோகம் உட்பட அனைத்து வரிகளில் இருந்தும் விலக்கு அளிக்கப்பட்டு கொடுக்கப்பட்ட செய்தியைக் குறிக்கிறது. மேலும் ஒரு கல்வெட்டில் இவ்வூர் பாலூர் என குறிப்பிடப்பட்டுள்ளதோடு திருவனந்திசுவரமுடையாருக்கும், அஞ்சாத பெருமாள் சந்திக்கும் அதாவது பூசைக்கும், திருப்படி மாற்றும் செலவினத் துக்கும் வரி நீக்கி இரண்டு மா நிலம் வழங்கப்பட்டு அதன் நான்கெல்லைகளிலும் திரிசூலக்கல் நட்டு வைத்து இவ்வாண்டு முதல் சந்திர சூரியன் உள்ளவரை இத்தர்மம் நிலைத்திருக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு மாளவச் சக்கரவர்த்தி ஓலை என்று துவங்குவது குறிப்பிடத்தக்கது. இதுபோல அரண்மனைச் சிறுவயல் கோயிலில் காணப்படும் கல்வெட்டிலும் மாளவச்சக்கரவர்த்தி ஓலை என்ற வரி காணப்படுகிறது. மேலும் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டுக்கள் தற்போதைய சிவகங்கை மாவட்டத்தில் திருப்புத்தூர், சதுர்வேதிமங்கலம், பெரிச்சி கோயில், அரண்மனை சிறுவயல், திருமலை, கம்பனூர், வெளியாத்தூர் போன்ற பகுதிகளில் காணப்படுகின்றன. இதில் காணப்படும் செய்தி போலவே வெளியாத்தூர் கோயிலில் காணப்படும் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டிலும், மழவராயர் நமக்குச் சொன்னமையினால் என்று வரிகள் வருவது குறிப்பிடத்தக்கது.



# புதிய மீன் வளர்ப்பு குளங்கள் அமைத்தல் திட்டத்தின் கீழ் விருப்பமுள்ள நபர்கள் விண்ணப்பித்து பயன்பெறலாம்

## மாவட்ட ஆட்சியர் தகவல்

சிவகங்கை, நவ.08-

சிவகங்கை மாவட்டத்தில் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் (2023-2024) மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சார்பில் செயல்படுத்தப்படவுள்ளது. அதில், புதிய மீன் வளர்ப்பு குளங்கள் அமைத்தல் திட்டமானது (2023-2024) பொதுப்பிரிவின் கீழ்-1 ஹெக்டேருக்கு 40% மானியத்தில், ஒரு அலகிற்கான விலை ரூ 7.0 இலட்சம் / ஹெக்டேர் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, செயல்படுத்தப்படவுள்ளது.

எனவே, புதிய மீன் வளர்ப்பு குளங்கள் அமைத்தல் திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் நபர்கள் 5/3, யூனியன் வங்கி மாடியில்,பெருமாள் கோயில் தெரு, சிவகங்கை - 630561 என்ற முகவரியில் செயல்பட்டு வரும் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, உதவி இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்ப படிவம் பெற்று விண்ணப்பிக்கலாம். கூடுதல் விபரங்களுக்கு மீன்வள ஆய்வாளர் அவர்களை 9384824553 என்ற அலைபேசி எண்ணிலும், மீன்வள மேற்பார்வையாளர் தரம் II அவர்களை 9790656919 என்ற அலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.





# வேலூர் மாவட்டத்தின் புதிய முதன்மைக்கல்வி அலுவலர் ஆர்.பிரமேலதாவுக்கு வேலூர் மாவட்ட, தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் கழகத்தின் சார்பில் சந்தித்து வாழ்த்து

வேலூர், நவ.08-

வேலூர் மாவட்டம், ஆட்சியரக வளாகம், மாவட்ட முதன்மை கல்வி அலுவலகத்தில் புதிய மாவட்ட முதன்மை கல்வி அலுவலருக்கு கௌரவிப்பு, இராணிப்பேட்டை மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) பணியாற்றி பதவி உயர்வின் மூலம் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலராக பொறுப்பேற்ற ஆர்.பிரமேலதா அவர்களுக்கு, வேலூர் மாவட்ட, தமிழ்நாடு மேல் நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் கழகத்தின் சார்பில் மாவட்ட தலைவர் தனஞ்செழியன் தலைமையில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர் இதில் மாவட்ட செயலாளர் ஜெகநாதன், மாநிலத் துணைத் தலைவர் வெங்கடேசன், மேனாள் மாவட்ட தலைவர் ஜோதீஸ்வரர் பிள்ளை, மேனாள் மாவட்ட செயலாளர். கார்த்திகேயன் மேனாள் மாவட்ட பொருளாளர் சங்கர் மாவட்ட மகளிர் அணி தலைவர் சரளா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



# வேலூரில், தேர்தல் விதி மீறப்படுவதாக கலெக்டர் அலுவலகத்தில் அ.தி.மு.க. வினர் புகார் மனு

வேலூர், நவ.08-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், வேலூர் மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.கே. அப்பு மற்றும் புறநகர் மாவட்ட செயலாளர் வேலழகன் ஆகியோர் அதிமுக நிர்வாகிகளுடன் கலெக்டர் அலுவலகத்தில் புகார் மனு அளித்தனர்.

மனுவில் கூறியிருப்பதாவது, இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் சீர்திருத்த பணிகளை தொடங்கியுள்ளது. அதன்படி வாக்குச்சாவடி அலுவலர்கள் ஒவ்வொரு வீடாகச் சென்று விண்ணப்பம் படிவங்களை நேரடியாக வழங்க உத்தரவிட்டுள்ளது.

வேலூர் மாவட்டத்தில் வயதான மற்றும் தற்காலிக பணியாளர்கள் வாக்குச்சாவடி முகர்வுகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் ஒரே இடத்தில் இருந்து கொண்டு மொத்தமாக விண்ணப்ப படிவங்களை கொடுத்து விட்டு செல்கின்றனர். காட்பாடியில் ஒய்வு பெற உள்ள வீரமா என்பவர் வாக்குச்சாவடி முகவராக பியமிக்கப்பட்டுள்ளார். அவரால் வீடு வீடாக சென்று விண்ணப்ப படிவம் தர முடியாததால் அவரது மருமகள் தி.மு.க வட்டச் செயலாளராக உள்ள சுகுணா என்பவர் பணிகளை செய்து வருகிறார். இதனால் பல்வேறு முறைகேடுகள் நடைபெற வாய்ப்பு உள்ளது. எனவே நேர்மையான முறையில் வாக்குச்சாவடி முகவர்களை நியமிக்க வேண்டும். இவ்வாறு மனுவில் தெரிவித்து இருந்தனர். பின்னர் செய்தியாளர்களிடம் மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.கே. அப்பு கூறியதாவது, திமுகவினருக்கு சார் என்றாலும் எஸ்.ஐ.ஆர் என்றாலும் அச்சப்படுகின்றனர் என்றார். இந்த நிகழ்ச்சியில் அ.தி.மு.க மாநில அமைப்பு செயலாளர் ராமு, மாநில ஜெயலலிதா திருமால் பேரவை துணை செயலாளர் தாஸ், மாவட்ட பொருளாளர் மூர்த்தி, நிர்வாகிகள் திருமால், குப்பசாமி, சுந்தர்ராஜ், ரஞ்சித், ஜெயபிரகாஷ், மாநகராட்சி கவுன்சிலரும் வழக்கறிஞருமான வெற்றி சரவணன் மற்றும் நிர்வாகிகள் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## கோவையில் கல்லூரி மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து

# வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே பாஜக மகளிர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

வேலூர், நவ.08-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில், வேலூர் மாவட்ட பாஜக மகளிர் அணியினர் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், கோவையில் கல்லூரி மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார். இந்த சம்பவத்தை கண்டித்து, பாஜக மகளிர் அணி சார்பில் மாவட்ட தலைவர் தசரதன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பாரதிய ஜனதா கட்சி அனைத்து பிரிவினர்கள் மற்றும் மகளிர் அணியினர் பேனரை பிடித்து, கண்டனத்திற்குரிய பல்வேறு பதாகைகளை கையில் ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பெண்களுக்கு பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகத்தை மாற்றிய திமுக அரசு, மக்களிடம்





மன்னிப்பு கேட்க வேண்டும். தமிழகத்தில் பெண்களின் பாதுகாப்பற்ற மாநிலமாக மாற்றிய தமிழக ஸ்டாலின் அரசை கண்டிக்கின்றோம். கோவை கல்லூரி மாணவி கூட்டு பாலியல் சம்பவத்திற்கு பொறுப்பேற்று திமுக ஸ்டாலின் அரசு பதவி விலக வேண்டும், தமிழகத்தில் பாலியல் சீண்டல்களை தடுக்க வேண்டும். தமிழகத்தில் இது போன்ற வன்கொடுமை சம்பவங்கள் இனி நடக்கக்கூடாது என்றும், போதைப்பொருள் முழுவதுமாக தமிழகத்தில் தடை செய்ய வேண்டும் என்றும் பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்காத தமிழக அரசை கண்டித்தும் கோஷங்கள் எழுப்பப்பட்டது.

இதில் நூற்றுக்கு மேற்பட்ட பாஜகவினர் பங்கேற்று தமிழகத்தில் நிலவி வரும் பல்வேறு சட்ட ஒழுங்கில் கவனகுறைவாக செயல்படும் தமிழக அரசை கண்டித்து கோஷங்களை எழுப்பினர்.

இதில் சிறப்பு அழைப்பாளராக பாஜக மாநில பொதுச் செயலாளர் கார்த்தியாயினி பங்கேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு கண்டன பேருரை ஆற்றி, செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தனர்.

மாவட்ட செயலாளர் ஈஷா சங்கர், மாவட்ட பட்டியல் அணி தலை வர் டாக்டர் சரவண குமார், மாவட்ட பொதுச் செயலாளர்கள் சரவணகுமார், ஷகிலா ஜெயக்குமார், துணைத் தலைவர்கள், சக்கரவர்த்தி, ஜெகன், காட்பாடி கே.ஜி குட்டி. மண்டல தலைவர் ஜெய், மகளிர் அணி மாவட்ட தலைவி சுகன்யா, ஊடகப்பிரிவு மாவட்டத் தலைவர் குமரன், ஊடகப்பிரிவு மாவட்ட பொறுப்பாளர் சந்தன், மாவட்ட செயலாளர்கள் முரளி ,செல்லப்பன், குமார், அணி பிரிவு மாவட்ட தலைவர்கள் சிவராமன், சுதாகர், குமரன், விக்னேஷ், வெங்கடேசன், மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் நாகராஜன், ஒய்வு பெற்ற ராணுவ வீரரும் முன்னாள் முப்படை வீரர்கள் பிரிவு அணைக்கட்டு கிழக்கு ஒன்றிய தலைவர் கே. வேலாயுதம் ஷிவி/ ஷிஹினி, பாஜக மாநில மாவட்ட நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161